[1992 ஏப்ரல் 27

633 —

## ஆரம்ப சுகாதார மையத்திற்கு கட்டிட வசதி.

* 4775 திரு. கே. பி. மணிவாசகம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், பாப்பான்குளத்தில் அரசு ஆரம்ப சுகாதார மையத்திற்கு கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) உடுமலை வட்டம், பாப்பான்குளம் அரசு ஆரம்ப சுகாதார மையத்திற்கு கட்டிடம் கட்ட அரசு ஆணை வெளியிட்டு அதற்குரிய நிலம் 8—10—1991 அன்று பொதுப்பணித் துறையிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 9-50

திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடுமலைத் தொகுதி, பாப்பான்குளத்தில் பிரைமரி ஹெல்த் சென்டர் துவங்குவதற்கான வேலை 3 ஆண்டுகளாக நடைபெறவில்லை. இதற்குப் பின்பு பல்வேறு பிரைமரி ஹெல்த் சென்டர்களுடைய வேலைகள் துவங்கப்பட்டுள்ளன. நிலம் ஆர்ஜிதம் செய்தும், காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே புரட்சித் தலைவி அவர்களுடைய புனித அரசு இந்த ஆண்டிலாவது விரைவாக அதைக்கட்டித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னேன். 8—10—1991 அன்று பொதுப் பணித் துறையிலே நிலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எனவே விரைவாக அவர்கள் நடவடிக்கையை மேற்கொள்வார்கள். நிச்சயமாக அந்த வேலை விரைவாக முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 634, டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

1992 ஏப்ரல் 27]

634—

## கருங்கல் பகுதியை மையமாக வைத்து போக்குவரத்து மையம் அமைத்தல்.

* 3527 டாக்டர் தே. குமாரதாஸ் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பகுதியை மையமாக வைத்து போக்குவரத்து மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை,

(ஆ) கேள்விக்கு இடமில்லை,

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பகுதியை மையமாக வைத்து ஒரு போக்குவரத்து மையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்த அரசுக்கு விடுத்திருந்தேன். காரணம் என்ன என்று சொன்னால், நாகர்கோவிலிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் அளவில் மன்டே மார்க்கெட், குளச்சல் இந்த இரண்டுக்கும் இடைப் பட்டுள்ள பகுதி என்று பார்க்கும்போது 7 கிலோ மீட்டர் தொலைவுதான், ஒரு பஸ் டிப்போதான் இருக்கிறது. பெருவாரியான பேருந்துகள் கருங்கல் பகுதியை மையமாகக் கொண்டு சென்றால்தான், ஒரு டிராபிக் சென்டரிலிருந்து 35 கிலோ மீட்டர் சர்க்கிளில் டவுன் பஸ்கள் இயங்குகின்ற வாய்ப்பு வரும். எனவே அந்தப் பகுதியில் ஒரு போக்குவரத்து மையம் ஏற்படுத்தி செயல்படுமென்று சொன்னால் அந்தப் பகுதி மக்களுக்கு அது பயன்படும். இல்லை என்று சொன்னால் எல்லோரும் மபசில் பஸ்களில்தான் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அரசு அதைக் கருத்திற்கொண்டு கருங்கல் பகுதியில் போக்குவரத்து மையம் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, கே,ஏ, செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கருகங்கல்லிலிருந்து கிழக்குப் புறமாக சுமார் 9.5 கிலோ மீட்டர்

தொலைவில் அமைந்துள்ள திங்கள் சந்தையில் ஒரு பெரிய பணிமனை அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல குழித்துறையில் ஒரு பணிமனை அமைக்கப்பட்டிருக்கிறது. குளச்சலில் ஒரு பணிமனை அமைக்கப்பட்டிருக்கிறது. கருங்கல்லிலும் ஒரு பணிமனை இருக்கிறது. மேலும் கூடுதலாக ஒரு பணிமனை தேவை என்று உறுப்பினர் கேட்டிருக்கிற காரணத்தால் அதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று நான் குறிப்பிட்டேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருங்கல் பகுதியில் பணிமனை இல்லை, பேருந்து நிலையம்தான் இருக்கிறது, அங்கே தினசரி 100, 125 பேருந்துகள் வந்து செல்லுகின்ற வாய்ப்பு இருப்பதால், அந்தப் பகுதியில் ஒரு பணிமனை அமைத்துத் தந்தால் அது சிறப்பாக இருக்கும், அங்கே இப்போது பணி மனை இல்லை, எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைக் கருத்திற்கொண்டு, அந்தப் பகுதியில் பணிமனை அமைக்க முன்வருவார்களா? அப்படி முன்வருவதாக இருந்தால் அதற்கான இடத்தை நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, அதைத் தொடங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு 35 கிலோ மீட்டர் தொலைவில் பணிமனை இல்லை என்று சொல்ல முடியாத அளவுக்கு நாம் நிலைமைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம், அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதற்கு. அந்தப் பகுதியில் 14 கிலோ மீட்டர் சுற்றுப் புறத்தில் பணிமனை இருப்பதால். நான் அந்தப் பகுதியில் பணிமனை அமைக்கும் சாத்தியக் கூறு இல்லை என்று குறிப்பிட்டேன், நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு எங்கெங்கே பணிமனை வேண்டுமென்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பணிமனைகள் இல்லை என்று சொல்ல முடியாத அளவுக்கு ஒரு நிலையை உருவாக்குவதற்கு நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 1992-க்குப் பிறகு, எந்தப் பணிமனையிலிருந்து நாம் பேருந்துகளை இயக்கினாலும், 35 கிலோ மீட்டருக்கு மேலே எல்லா இடத்திலும் பணிமனை இருக்கும் என்ற நிலைமையை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்து. இதற்கு சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.